**CC.NO.68/2017**

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.8, ஜெயராமன், த/பெ. செவந்தலிங்கம், எம்.பி.எண்.23/2025, தேதி 27.10.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1. 30.12.2015 அன்று மேற்படி வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். சாட்சிகள் ராஜசேகர், குப்புசாமி, சந்திரசேகர் ஆகிய மூவரையும் ஒரே நாளில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1 னிடம் வாங்கிய மறு வாக்குமூலத்தில் 02.04.2015 என பதிவு செய்து பின் 30.12.2015 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது கையால்தான் அடித்து திருத்தம் செய்தேன் என்றால் சரிதான். நான் திருத்த செய்ததற்கு கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 02.04.2015 தேதியில் கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.சா.1 னிடம் மறு வாக்குமூலம் பெற்றேன். அ.சா.1 மறு வாக்குமூலத்தில் சி.எஸ்.ஆர். பற்றியோ, உயர்நீதிமன்றத்தில் பெற்ற உத்தரவு எண்ணையோ, உத்தரவு நகலையோ பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. அ.சா.1 மறு வாக்குமூலத்தில் நாணயங்கள் எண்ணிக்கை பற்றியோ, அதன் மதிப்பை பற்றியோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மறு வாக்குமூலத்தில் எதிரியிடம் போன் மூலம் தொடர்பு கொண்டதற்கான ஆதரமாக ஆடியோ பதிவோ, ஸ்கிரீன் சாட்டோ ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. அதை பற்றி நான் விசாரணை செய்யவில்லை

என்றால் நான் விசாரணை செய்தேன் அதை பற்றி அவர் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக சிடிஆர் போட்டு விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அ.சா.1 மறு வாக்குமூலத்தில் சூட்கேசிலிருந்து நாணயங்களை காணவில்லை என்று அ.சா.1 கூறியபோது, அந்த சூட்கேசை காவல் நிலையம் கொண்டு வந்து விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அந்த சூட்கேசை கைரேகை நிபுனர்களை வைத்து விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அ.சா.1ஐ இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை முறை விசாரணை செய்தேன் என்றால் 1 முறை விசாரித்தேன். அ.சா.6 ஐ கடையில் சென்று விசாரித்தற்கான ஆடியோ பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3. அ.சா.6 டமிருந்து வீடியோ பதிவோ, ஆடியோ மற்றும் போட்டோவை கைப்பற்றினேனா என்றால் இல்லை. பொதுவாக வீடியோ ஆடியோ மற்றும் போட்டோக்களை வாங்கினால் நீதிமன்றத்தில் 65 சான்றிதழுடன் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அதுபோல 65 சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். இவர்தான் எதிரி என்று எதை வைத்து உறுதி செய்தேன் என்றால் சாட்சி குப்புசாமி என்பவர் சொல்லி உறுதி செய்தேன். எதிரியை தேடி வழக்கு சம்மந்தமாக அவரது வீட்டிற்கு சென்றேனா என்றால் சென்றேன், ஆனால் அவர் அங்கில்லை. குப்புசாமியையும், ராஜசேகரனையும் ஒன்றாக வைத்துதான் விசாரணை செய்தேன் என்றால் சரியல்ல. தனித்தனியாக விசாரித்தேன். எப்போது விசாரித்தேன் என்றால் சரியாக நேரம் தெரியவில்லை. 30.12.2015 அன்று நான் பணி மாறுதலில் சென்றதல் காவல் ஆய்வாளர் செந்தில் குமரன் வசம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

4. எதிரியின் வீட்டின் அருகிலுள்ளவர்களை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர்களை சாட்சியாக சேர்த்தேனா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வாக்குமூலமோ, விசாரணையோ செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விசாரணை மற்றும்

வழக்காவணங்களை அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் பின்னிட்டு வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**